கோயம்புத்தூர் மாநகராட்சி வ.உ.சி மைதானத்தில் செய்தித்துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நேற்று முன்தினம் (13.05.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், துணை மேயர் இரா.வெற்றிசெல்வன் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக இருந்த உதயசந்திரன் ஐ.ஏ.எஸ். - நிதித்துறைச் செயலாளராகிறார்!

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

நிதித்துறைச் செயலாளர் என்.முருகானந்தம் - முதல்வரின் முதன்மைச் செயலாளராக நியமனம்!

சென்னை, மே 15-

முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக - நிதித் துறைச் செயலாளராக இருந்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி முருகானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக இருந்த உதயசந்திரன் நிதித் துறைச் செயலாளராக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், நிதித்துறைச் செயலாளராக இருந்த முருகானந்தம், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால்துறை முதன்மை செயலாளராக பி.அமுதாவும், போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளராக பணீந்திர ரெட்டியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சி ஆணையர் ககன் தீப் சிங் பேடி சுகாதாரத்துறை செயலாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். சென்னை மாநகராட்சி ஆணையராக ராதாகிருஷ்ணன் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். போக்குவரத்துத்துறைச் செயலாளர் கோபால், வஞ்ச ஒழிப்புத்துறை ஆணையராக நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

சுகாதாரத்துறைச் செயலாளர் செந்தில்குமார் ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

சுற்றுலாத்துறைச் செயலாளர் சந்திரமோகன், பொதுப்பணித்துறை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை ஆணையராக இருந்த நந்தகுமார், மனிதவள மேலாண்மைத்துறைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர்

கே.கே.செல்லபாண்டியனின் தந்தை ஆசிரியர் கண்ணன் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி!

சென்னை, மே 15 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியனின் தந்தையார் - ஆசிரியர் கண்ணன் அவர்கள் நேற்று முன்தினம் மாலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இம் மறைவுச் செய்தியறிந்து துயருற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை - மாவட்டச் செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் மற்றும் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஒரே நாளில் கொரோனா பாதிப்பு!

புதுடெல்லி, மே 15-

இந்தியாவில் கொரோனா தொற்றால் புதிதாக 1,272 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய சுகாதாரத்துறை நேற்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. பாதிப்பு நேற்று 1,223 ஆக இருந்த நிலையில் நேற்று முன்தினம் சற்று அதிகரித்துள்ளது.

இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 49 லட்சத்து 80 ஆயிரத்து 674 ஆக உயர்ந்துள்ளது. தொற்று பாதிப்பில் இருந்து இதுவரை 4 கோடியே 44 லட்சத்து 33 ஆயிரத்து 389 பேர் குணமடந்துள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் குணமான 2,252 பேர் அடங்குவர். தொற்று பாதிப்புடன் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிக்கை நேற்றைவிட 983 குறைந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி 15,515 பேர் சிகிச்சையில் உள்ளனர். தொற்று பாதிப்பால் நேற்று முன்தினம் பஞ்சாபில் 2 பேர், மேற்கு வங்கத்தில் ஒருவர் என 3 பேர் இறந்துள்ளனர். மொத்த பலி எண்ணிக்கை 5 லட்சத்து 31 ஆயிரத்து 770 ஆக உயர்ந்துள்ளது.

வாலாஜாபாத் வடக்கு ஒன்றியக் கூட்டம்!

காஞ்சிபுரம், மே 15-

வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் பொது உறுப்பினர்கள் கூட்டம் வி.பழனி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். உடன் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி பூத் கமிட்டி பார்வையாளர் டாக்டர் சுபேர்கான், க.செல்வம் எம்.சி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் அரசின் இரண்டாம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில்

கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்த குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!
காவல் துறை ஆய்வாளர்கள் பணியிடை நீக்கம்!

சென்னை, மே 15 -

விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகே எக்கியார் குப்பத்தில் கள்ளச் சாராயம் அருந்தியதால் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சுரேஷ், சங்கர் மற்றும் தரணிவேல் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.

கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், இச்சம்பவம் நடைபெற்ற பகுதியைச் சேர்ந்த மரக்காணம் காவல்நிலைய ஆய்வாளர் அருள்வடிவழகன், உதவி ஆய்வாளர் தீபன், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆய்வாளர் திருமதி.மரியா சோபி மஞ்சுளா மற்றும் உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் ஆகியோர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்த அமரன், த/பெ.வேணு கைது செய்யப்பட்டுள்ளார். இதில் தொடர்புடைய இதர குற்றவாளிகளைத் தேடும் பணியும் விரைவு படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இச்சம்பவத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து இலட்சம் ரூபாயும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

+2 தேர்ச்சி பெற்ற மாணவ - மாணவிகள் பயன்பெறும் வகையில்

திரு.வி.க.நகர் தொகுதியில் உயர்கல்வி வழிகாட்டுதல் முகாம்!

ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 15-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண் 72 ல் யில் உள்ள சமுதாய நலக்கூடத்தில், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவியர்கள் பயன் பெறும் வகையில் அடுத்த என்ன படிப்பை தேர்வு செய்து படிக்கலாம்? என்று இருக்கும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக உயர்கல்வி வழிகாட்டுதல் முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திரு.வி.க.நகர் மற்றும் சென்னையை சுற்றியுள்ள மீஞ்சூர், அத்திப்பட்டு எழும்பூர், வியாசர்பாடி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மாணவ மாணவியர்க்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் மதுரை சமுதாயக் கல்லூரி ஆகியவை இணைந்து உயர்கல்வி வழிக்காட்டுதல் முகாம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கழக துணை அமைப்பு செயலாளர் , தமிழ்நாடு சட்டமன்ற சட்டவிதிகள் குழு தலைவர் ,திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம் கவி அவர்கள் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

மேலும்,அவர் பேசும் போது பன்னிரெண்டாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்கள் அடுத்து என்ன படிக்கலாம் என்றும், எது போன்ற கல்வியைத் தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும் என்கிற நல்ல பல ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், அந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவர்களிடம் என்ன படிக்க விம்புகிறீர்கள் என்றும் இடையிடையே அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தும், அவர்களின் ஐயங்களைப் போக்கும் விதமாக அவர்களுடன் ஒரு கலந்துரையாடல் நடத்தினார் சட்டமன்ற உறுப்பினர்.

பல இடங்களில் இருந்து வந்த மாணவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கியும், கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் டிசர்ட் வழங்கி கழக துணை அமைப்பு செயலாளர் , சட்டமன்ற சட்டதிட்டக்குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் வழங்கறிஞர் ப தாயம்கவி அவர்கள் சிறப்பித்தார்.

தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சமூக மேம்பாட்டு நிபுணர் திருமதி லெகிஸ் அவர்கள் ஒருங்கிணைத்த இந்நிகழ்வில், 72 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம். சரவணன்,தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் செல்வராஜ், நிர்வாக பொறியாளர் சுடலை முத்துகுமார், உதவி செயற்பொறியாளர் தயாளன்,உதவி பொறியாளர் முத்தரசி, மதுரை டாக்டர் விஜய் சரவணன், மற்றும் சங்கரி,சங்கீதா, பிரதிபா மற்றும் அரசு வழக்கறிஞர் சங்கர், வட்ட அவைத்தலைவர் வேலு, ஐ.டி.விங்.கௌதம், வழக்கறிஞர் அரவிந்த், ஸ்டாலின் சரத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சபர்மதி ஆசிரமம் குணசேகரன், நல்லூர் வட்டம் நாகராஜன் மற்றும் முத்துகிருஷ்ணன் ஆகியோர் வருகைத்தந்த மாணவ, மாணவியருக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

மேலும் இந்த நிகழ்வில் கன்னிகாபுரம் ஆதிதிராவிடர் பெண்கள் மேல்நிலை பள்ளியில் முதன்மை மதிப் பெண் பெற்ற மாணவி திவ்யஸ்ரீக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஏற்பாட்டில் நடைபெற்ற தொடர் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, செ.இராமலிங்கம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ ஆகியோர் பரிசுகளை வழங்கினர். பின்னர் கவிஞர் நந்தலாலா தலைமையிலான குழுவினரின் நகைச்சுவை பட்டிமன்றம் நடைபெற்றது. விழாவில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

துரைமுருகன் - ஐ.பெரியசாமி - க.பொன்முடி - ஆ.இராசா- கனிமொழி கருணாநிதி - உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

தொ.மு.ச. பேரவை பொன்விழா மாநாடு: முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

கலைவாணர் அரங்கில் மூன்று நாள் நிகழ்ச்சி! மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, மே 15 -

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை எல்.பி.எப். யின் பொதுக்குழு மே மாதம் 16, 17 ஆகிய தேதிகளிலும், 18 ஆம் தேதி பொன்விழா மாநாடும் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது. மாநாட்டினையெட்டி, 18 ஆம் தேதி பேரணி நடைபெறுகிறது. பேரவை பொன்விழா மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற , நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரையாற்று கிறார்கள்.

இந்நிகழ்ச்சி குறித்து தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தொ.மு.ச.பேரவை பொன் விழா மாநாடு - 25-வது பொதுக்குழு மே16, 17, 18 ஆகிய தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

16-5-2023 காலை 9 மணிக்கு கொடியேற்றல், காலை 10 மணிக்கு ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி, எம்.எச்.எஸ்., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., டி.யு.சி.சி., ஏ.ஐ.சி.சி.டி.யு., எம்.எல்.எப்., எல்.எல்.ப்., பி.எஸ்.ஐ. ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றுகின்றனர்.

பிற்பகல் 2 மணிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பொதுக்குழுவை தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. ஆண்டறிக்கையையை தாக்கல் செய்கிறார். பொருளாளர் கி.நடராசன் வரவு - செலவு கணக்கு தாக்கல் செய்கிறார்.

கருத்தரங்கம்!

மாலை 5 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கத்தில் “சமூக நீதி” என்ற தலைப்பில் திருச்சி சிவா எம்.பி., ‘ஜனநாயகம்’ என்ற தலைப்பில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ‘தொழில் வளர்ச்சி’ என்ற தலைப்பில் சி.மகேந்திரன் (சி.பி.ஐ.), ‘தொழிலாளர் நலன்’ என்ற தலைப்பில் சு.வெங்கடேசன் எம்.பி. (சி.பி.ஐ.) ஆகியோர் பேசுகின்றனர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

17-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு குழுக்களின் விவாதம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு தீர்மானங்கள் பொதுக்குழுவில் வைத்து ஒப்புதல் பெறப்படுகிறது.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி

18-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் வாழ்த்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன் மற்றும் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி., மற்றும் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னோடிகள் பேசுகின்றனர்.

மாலை 4 மணிக்கு சுவாமி சிவானந்தா சாலையில் அணிவகித்து நடைபெறும் மாபெரும் பேரணியை கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைக்கிறார்.

இரவு 7 மணிக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார். மேலும் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசன் நன்றியுரையாற்றுகிறார்.

பொறியியல் படிப்புகளில் சேர 1 லட்சம் மாணவர்கள் விண்ணப்பம்!

சென்னை, மே 15-

கடந்த 8 நாள்களில் 91 ஆயிரத்து 38 விண்ண ப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இன்று அது 1 லட்சத்தை கடந்து அவர்களில் 46 ஆயிரத்து 10 பேர் கட்டணம் செலுத்தி உள்ளனர். பொறியியல் படிப்புக்கான விண்ணப்பப் பதிவு ஜூன் 4ந்தேதியுடன் நிறைவடைய உள்ளது.

தமிழகத்தில் பொறியியல் படிப்புகளில் சேர்க்கை பெற கடந்த 8 நாள்களில் 91 ஆயிரத்து 38 விண்ணப்பங்கள் பெறப்பட்டு உள்ளன. இன்று அந்த விண்ணப்பங்கள் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டியது. தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகள், சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 2023-24ம் கல்வியாண்டில் பி.இ., பி.டெக்., பி.ஆர்க்., பட்டப்படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கான விண்ணப்ப பதிவு கடந்த மே 5ந்தேதி முதல் தொடங்கியது.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் சங்கராபுரம் தெற்கு ஒன்றியம் பூட்டை யில் தி.மு.க. சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தலைமை கழகப் பேச்சாளர் கு.வாஞ்சிநாதன், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி தமிழக அரசின் இரண்டு ஆண்டு கால சாதனைகளை குறித்து விளக்கி பேசினர். மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையர் கன்னி, ஒன்றிய செயலாளர் ந.ஆறுமுகம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பால அண்ணாமலை மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய கழக செயலாளர்கள், நகர கழக நிர்வாகிகள், பூட்டை கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.